# Tamil Language Eligibility Test

| | Sr. No. | Question Body and Alternatives |
|---|---|---|
| 1 | 1 | பின்வரும் தொடர்களில் வல்லினம் தவறாக மிகுந்துள்ள தொடரைத் தேர்க.<br><br>A) கேட்டுக் கொண்டார்<br><br>B) என்றுக் கூறினார்<br><br>C) ஆடச் சொன்னார்<br><br>D) இனிக் காண்போம் |
| 2 | 2 | ‘நடுத்திராவிட மொழிகள்’ என்னும் வகைமைக்குள் இடம்பெறாத மொழி<br><br>A) கோத்தா<br><br>B) கோண்டா<br><br>C) கோலாமி<br><br>D) கோண்டி |
| 3 | 3 | சரியான இணையைத் தேர்வு செய்க.<br><br>A) காருகர் – வெற்றிலை விற்போர்<br><br>B) கண்ணுள் வினைஞர் – நெய்பவர்<br><br>C) ஓசுநர் – எண்ணெய் விற்போர்<br><br>D) பாசவர் – நறுமணப்பொடி விற்பவர் |
| 4 | 4 | ‘முத்தமிழ்க் காப்பியம்’ என்று சிறப்பிக்கப்படும் காப்பியம்<br><br>A) மணிமேகலை<br><br>B) சிலப்பதிகாரம்<br><br>C) சீவகசிந்தாமணி<br><br>D) கம்பராமாயணம் |
| 5 | 5 | குழந்தை தன் இரு கை ஊன்றி, ஒரு காலினை மடக்கி மற்றொரு காலை நீட்டி தலை நிமிர்ந்தும் முகமசைத்தும் ஆடும் பருவம் |

A) அம்மானை

B) ஊசல்

C) செங்கீரை

D) வருகை

6 6 சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல்

A) கலித்தொகை

B) குறுந்தொகை

C) பரிபாடல்

D) அகநானூறு

7 7 சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்ட சிற்றிலக்கிய நூல்

A) கலிங்கத்துப்பரணி

B) முத்தொள்ளாயிரம்

C) நந்திக் கலம்பகம்

D) முக்கூடற்பள்ளு

8 8 ‘வாயில் இலக்கியம்’ என்னும் பெயரால் அழைக்கப்படும் சிற்றிலக்கியம்

A) கலம்பகம்

B) பள்ளு

C) தூது

D) பிள்ளைத்தமிழ்

9 9 நம்பியாண்டார் நம்பியால் எழுதப்பட்ட நூல்

A) திருத்தொண்டர் திருவந்தாதி

B) திருத்தொண்டத் தொகை

C) திருத்தொண்டர் புராணம்

D) திருவிளையாடற் புராணம்

10 10 இந்திரவிழா நடைபெறும் நாள்கள்

A) 28 நாள்கள்

B) 18 நாள்கள்

C) 38 நாள்கள்

D) 48 நாள்கள்

11 11 ‘தமிழ் மூவாயிரம்’ என்று அழைக்கப்படும் நூல்

A) திருக்குறள்

B) நாலடியார்

C) திருமந்திரம்

D) ஏலாதி

12 12 நெய்தற்கலியை இயற்றியவர்

A) பேயனார்

B) கபிலர்

C) ஓதலாந்தையார்

D) நல்லந்துவனார்

13 13 தந்தை பெரியார் நடத்தாத இதழ்

A) குடியரசு

B) ரிவோல்ட்

C) உண்மை

D) பாரதமணி

14 14 பிள்ளைத்தமிழில் ஆண், பெண் இருவருக்கும் பொதுவான பருவங்களின் எண்ணிக்கை

A) பத்து

B) மூன்று

C) ஏழு

D) ஐந்து

15 15 ‘இன்மொழி’ – பிரித்து எழுதுக.

A) இன் + மொழி

B) இனிய + மொழி

C) இனிமை + மொழி

D) இன்மை + மொழி

16 16 அலை, அழை – ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

A) அலை – கடலலை
அழை – அழைத்தல்

B) அலை – கடலலை
அழை – புற்று

C) அலை – நிலவறை
அழை – வரவழைத்தல்

D) அலை – தீயணைத்தல்
அழை – மறைத்தல்

17 17 பிரித்து எழுதுக: பாடாண்திணை

A) பாடு + ஆண் + திணை

B) பாடா + ஆண் + திணை

C) பாடாண் + திணை

D) பாடான் + ஆண் + திணை

18 18 “மருந்தே ஆயினும் விருந்தொடு உண்”என்று கூறியவர்

A) நச்செள்ளையார்

B) ஔவையார்

C) திருவள்ளுவர்

D) திருமூலர்

19 19 கீழ்க்காண்பவற்றுள் பெருஞ்சித்திரனாரின் நூல் அல்லாதது

A) உலகியல் நூறு

B) புதிய உரைநடை

C) எண்சுவை

D) நூறாசிரியம்

20 20 உலக காற்று நாள்

A) ஜூன் – 15

B) ஆகஸ்ட் – 25

C) அக்டோபர் – 15

D) நவம்பர் – 25

21 21 “இட்டதோர் தாமரைப்பூ
இதழ்விரித் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள்கூடி
இரையுண்ணும்” – என்று பாடியவர்

A) பாரதியார்

B) பாரதிதாசன்

C) சுரதா

D) வாணிதாசன்

22 22 பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

A) நறுவீ – தூவி

B) நேமி – சக்கரம்

C) கோடு – மலை

D) விரிச்சி – நற்சொல்

23 23 ‘அண்டப் பகுதிகள் உருண்டை வடிவம் உடையன’ என்று கூறும் நூல்

A) பரிபாடல்

B) திருவாசகம்

C) புறநானூறு

D) தேவாரம்

24 24 ‘இஸ்மத் சன்னியாசி’ என்ற பட்டத்தை வீரமாமுனிவருக்கு வழங்கியவர்

A) சந்தாசாகிப்

B) பாபர்

C) தாந்தியா தோப்

D) ஜஹாங்கீர்

25 25

உரை(றை) ஊற்றி ஊற்றிப்
பார்த்தாலும்
புளிக்காத பால் !
தந்தை தந்த
தாய்ப்பால்
முப்பால் ! – என்று திருக்குறளைப் போற்றும் கவிஞர்

A) தாமரை பாரதி

B) நா. காமராசன்

C) அறிவுமதி

D) வாலி

26 26

கீழ்க்காண்பனவற்றுள் விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டுமே இணைத்துக் கவிஞரின் பெயரைத் தேர்க.
(i) ___ தவு (வீட்டைக் காப்பது)
(ii) அ ___ பு (வில்லோடு தொடர்புடையது)
(iii) ___ ட்டு (காஞ்சிபுரத்தின் சிறப்பு)
(iv) பல ___ (ஒருவர் என்பதன் எதிர்ச்சொல்)

A) கபிலர்

B) கம்பர்

C) கவிமணி

D) கலைஞர்

27 27

விடைக்கேற்ற வினாவைத் தேர்க.
உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு
நடத்திய முதல் நாடு மலேசியா.

A) மலேசியா எங்கு உள்ளது?

B) உலக மாநாடு என்றால் என்ன?

C) மலேசியா ஏன் உலக மாநாடு நடத்தியது?

D) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

28 28

பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி பயின்று வரும் சொல்லைத் தேர்க.

A) பனிக்காற்று

B) மணியடி

C) ஆலிலை

D) வாழைமரம்

29 29 ‘இருவர் உரையாடுவது’ போன்ற ஓசை

A) அகவலோசை

B) தூங்கலோசை

C) செப்பலோசை

D) துள்ளலோசை

30 30 ‘குண்டலமும் குழைகாதும்’ என்பதன் இலக்கணக்குறிப்பைத் தேர்க.

A) எண்ணும்மை

B) உம்மைத்தொகை

C) உவமைத்தொகை

D) வினைத்தொகை

31 31

பொருத்தி விடை தேர்க :

| | இயற்பெயர் | | புனைபெயர் |
|---|---|---|---|
| (a) | இராதாகிருஷ்ணன் | 1. | பெருஞ்சித்திரனார் |
| (b) | துரைராசு | 2. | பாரதிதாசன் |
| (c) | சுப்புரத்தினம் | 3. | முடியரசன் |
| (d) | துரை மாணிக்கம் | 4. | தாராபாரதி |

A) (a) 3 (b) 1 (c) 2 (d) 4

B) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

C) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

D) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

32 32

பொருத்தி விடை தேர்க :

| | நூல் | | நூலாசிரியர் |
|---|---|---|---|
| (a) | உயிர் அமுதாய் | 1. | மீரா |
| (b) | கோடையும் வசந்தமும் | 2. | பி.ச. குப்புசாமி |
| (c) | கன்னிவாடி | 3. | கோமகள் |
| (d) | ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியனின் குறிப்புகள் | 4. | க.சீ. சிவக்குமார் |

A) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

B) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

C) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

D) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

33 33

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | சந்திராயன்-I திட்ட இயக்குநர் | 1. | அருணன் சுப்பையா |
| (b) | இந்தியாவின் செவ்வாய் சுற்றுகலன் திட்ட இயக்குநர் | 2. | சிவன் |
| (c) | ரேடார் இமேசிங் செயற்கைக்கோள் திட்ட இயக்குநர் | 3. | மயில்சாமி அண்ணாதுரை |
| (d) | 2015 ஆம் ஆண்டில் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநர் | 4. | வளர்மதி |

A) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

B) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

C) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

D) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

34 34

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம் | 1. | புறநானூறு |
| (b) | வண்டொடு புக்க மணவாய்த் தென்றல் | 2. | ஔவைகுறள் |
| (c) | நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற் செந்தமிழின் பின்னுதித்த தென்றலே | 3. | சிலப்பதிகாரம் |
| (d) | நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக | 4. | பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது |

A) (a) 2 (b) 3 (c) 1 (d) 4

B) (a) 3 (b) 2 (c) 4 (d) 1

C) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

D) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

35 35

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | சண்பகம் | 1. | தலைமுறைக்கு ஒரு முறை மலர்வது |
| (b) | பிரம்ம கமலம் | 2. | நாளுக்கு ஒரு முறை மலர்வது |
| (c) | மூங்கில் | 3. | ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது |
| (d) | குறிஞ்சி | 4. | பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது |

A) (a) 2 (b) 3 (c) 1 (d) 4

B) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

C) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

D) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

36 36

பொருத்தி விடை தேர்க :

| | ஆசிரியர் | | நூல் |
|---|---|---|---|
| (a) | அதிவீரராம பாண்டியர் | 1. | மதுரைக் கலம்பகம் |
| (b) | பரஞ்சோதி முனிவர் | 2. | சரசுவதி அந்தாதி |
| (c) | குமரகுருபரர் | 3. | மதுரை பதிற்றுப் பத்தந்தாதி |
| (d) | கம்பர் | 4. | திருக்கருவை அந்தாதி |

A) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

B) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

C) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

D) (a) 4 (b) 1 (c) 3 (d) 2

37 37

பொருத்தி விடை தேர்க :

| | இசைக்கருவியின் பெயர் | | நரம்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (a) | வீணை | 1. | பத்தொன்பது |
| (b) | மகரயாழ் | 2. | இருபத்து ஒன்று |
| (c) | பேரியாழ் | 3. | பதினான்கு |
| (d) | சகோடயாழ் | 4. | ஏழு |

A) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

B) (a) 3 (b) 1 (c) 2 (d) 4

C) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

D) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

38 38

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | கழி | 1. | மூங்கிலின் அடி |
| (b) | கழை | 2. | குத்துச்செடியின் அடி |
| (c) | தட்டை | 3. | கரும்பின் அடி |
| (d) | தூறு | 4. | சோளத்தின் அடி |

A) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

B) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

C) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

D) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

39 39

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஓடு | 1. | மிக மெல்லியது |
| (b) | தோல் | 2. | வன்மையானது |
| (c) | தொலி | 3. | மிக வன்மையானது |
| (d) | தோடு | 4. | திண்ணமானது |

A) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

B) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

C) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

D) (a) 3 (b) 2 (c) 4 (d) 1

40 40

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | சிறுகுடி | 1. | மருதம் |
| (b) | பேரூர் | 2. | பாலை |
| (c) | பாக்கம் | 3. | குறிஞ்சி |
| (d) | குறும்பு | 4. | நெய்தல் |

A) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

B) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

C) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

D) (a) 1 (b) 3 (c) 4 (d) 2

41 41

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | அயோத்திதாசப் பண்டிதர் | 1. | ஒடுக்கப்பட்ட பாரதம் |
| (b) | அம்பேத்கர் | 2. | ஒரு பைசாத் தமிழன் |
| (c) | பாரதியார் | 3. | குடியரசு |
| (d) | பெரியார் | 4. | இந்தியா |

A) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

B) (a) 2 (b) 4 (c) 3 (d) 1

C) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

D) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

42 42

பொருத்தி விடை தேர்க :

| | பாடலின் தலைப்பு | | நூலின் பெயர் |
|---|---|---|---|
| (a) | ஓடை | 1. | கன்னிப்பாவை |
| (b) | வரும் முன் காப்போம் | 2. | கோடையும் வசந்தமும் |
| (c) | விடுதலைத் திருநாள் | 3. | தொடுவானம் |
| (d) | உயிர்க் குணங்கள் | 4. | மலரும் மாலையும் |

A) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

B) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

C) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

D) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

43 43

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | தமிழ்நாடு | 1. | மகரசங்கராந்தி |
| (b) | கர்நாடகம் | 2. | உத்தராயன் |
| (c) | பஞ்சாப் | 3. | பொங்கல் விழா |
| (d) | குஜராத் | 4. | லோரி |

A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

B) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

C) (a) 3 (b) 2 (c) 4 (d) 1

D) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

44 44

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | 10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும், பாடவும் ஆற்றல் பெற்றவர் | 1. | விக்டர் ஹியூகோ |
| (b) | 16 ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப்படையில் தளபதியானவர் | 2. | மாவீரன் அலெக்சாண்டர் |
| (c) | 15 ஆவது வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதி அனுப்பியவர் | 3. | கலிலியோ கலிலீ |
| (d) | 17 ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் | 4. | வள்ளலார் |

A) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

B) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

C) (a) 4 (b) 2 (c) 1 (d) 3

D) (a) 3 (b) 1 (c) 2 (d) 4

45 45

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | நா. காமராசனின் கவிதை நூல் | 1. | ஒரு கிராமத்து நதி |
| (b) | திரைப்படமாக வெளிவந்த கோமல் சுவாமிநாதனின் நாடக நூல் | 2. | கருப்பு மலர்கள் |
| (c) | நோபல் பரிசு பெற்ற எர்னஸ்ட் ஹெமிங்வேவின் குறு நாவல் | 3. | தண்ணீர் தண்ணீர் |
| (d) | சாகித்ய அகாதெமி பரிசுபெற்ற சிற்பியின் கவிதை நூல் | 4. | கிழவனும் கடலும் |

A) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

B) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

C) (a) 4 (b) 3 (c) 1 (d) 2

D) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

46 46

பொருத்தி விடை தேர்க :

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| (a) | வித்து | 1. | பெற |
| (b) | களை | 2. | கடுஞ்சொல் |
| (c) | ஈன | 3. | விதை |
| (d) | வன்சொல் | 4. | வேண்டாத செடி |

A) (a) 3 (b) 4 (c) 1 (d) 2

B) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

C) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

D) (a) 3 (b) 1 (c) 4 (d) 2

47 47

ஜெயகாந்தனின் படைப்புகளைப் பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஒரு பிடி சோறு | 1. | மொழி பெயர்ப்பு |
| (b) | பிரளயம் | 2. | புதினம் |
| (c) | பாரீசுக்குப் போ | 3. | சிறுகதைத் தொகுப்பு |
| (d) | வாழ்விக்க வந்த காந்தி | 4. | குறும்புதினம் |

A) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

B) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

C) (a) 3 (b) 2 (c) 4 (d) 1

D) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

48 48

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு | 1. | கவிமணி |
| (b) | மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு | 2. | ஔவையார் |
| (c) | காலை மாலை உலாவி நிதம் | 3. | திருமூலர் |
| (d) | ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் | 4. | திருவள்ளுவர் |

A) (a) 2 (b) 4 (c) 3 (d) 1

B) (a) 2 (b) 4 (c) 1 (d) 3

C) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

D) (a) 4 (b) 3 (c) 2 (d) 1

49 49

பொருத்தி விடை தேர்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | செங்கீரை | 1. | ஏழாம் பருவம் |
| (b) | சப்பாணி | 2. | ஐந்தாம் பருவம் |
| (c) | முத்தம் | 3. | இரண்டாம் பருவம் |
| (d) | அம்புலி | 4. | நான்காம் பருவம் |

A) (a) 4 (b) 1 (c) 3 (d) 2

B) (a) 2 (b) 3 (c) 1 (d) 4

C) (a) 3 (b) 4 (c) 2 (d) 1

D) (a) 2 (b) 1 (c) 4 (d) 3

50 50

பொருத்தி விடை தேர்க :

| | ஆசிரியர் | | நூல் |
|---|---|---|---|
| (a) | பாரதியார் | 1. | கந்தர்கலி வெண்பா |
| (b) | வாணிதாசன் | 2. | சந்திரிகையின் கதை |
| (c) | கவிமணி தேசிக விநாயகனார் | 3. | கொடிமுல்லை |
| (d) | குமரகுருபரர் | 4. | மருமக்கள் வழி மான்மியம் |

A) (a) 2 (b) 3 (c) 4 (d) 1

B) (a) 4 (b) 1 (c) 2 (d) 3

C) (a) 3 (b) 2 (c) 4 (d) 1

D) (a) 4 (b) 3 (c) 2 (d) 1